1967 மார்ச் 25] [திரு. சி. என். அண்ணுதுரை.]

கோரிக்கை எண் XLVI—ஓய்வூதியங்களை மொத்தமாக்குதல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,02,600-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் XLVII—அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,55,82,900-'க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் XLVIII—மாநில அரசாங்கம் வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 600-க்கு மேற்படாத தொகையையும்;
அரசிற்கு வழங்கவேண்டும்."

கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகைகள் வழங்கப்பட்டன.

5. அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்கு மசோதா.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்கு மசோதாவை இந்த அவைக்குக் கொண்டு வருவதற்கும் அதன் மீது விவாதிப்பதற்கும், மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் தமது இணக்கத்தை தெரிவித்திருக்கிறார்கள் என்பதை அறிவிக்கிறேன்.

அதையொட்டி, இப்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவை, இந்த அவைக்குக் கொண்டுவர அனுமதி கோருவார்கள்.

1. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா.

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணுதுரை : சட்டமன்றத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவை முன்னுரைக்க அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணுதுரை : சட்டமன்றத் தலைவர் அவர்களே, நான் இம்மசோதாவை முன்னுரைக்கிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : இம்மசோதா முன்னுரைக்கப்படுகிறது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பேரவை அலுவல் ஆய்வுக் குழுவின் தீர்மானங்கள்.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தில், ஒரு மனதாக நிறைவேறிய தீர்மானத்திற்கு இணங்க, இம்மன்றத்தின் அலுவல்கள் 27-3-1967 முதல் 30-3-1967 வரை இப்போது நான் அறிவிக்கின்ற நிகழ்ச்சி வரிசையின்படி நடைபெறும்.